சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் வேதனை அடைகின்றேன்.

மின்சாரம் தாக்கி உயிரிழந்த திரு. சரவணன் அவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்வதோடு, இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்த திரு. சரவணன் அவர்களின் குடும்ப நிலையைக் கருத்தில் கொண்டு, அவரது குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து மூன்று இலட்சம் ரூபாய் நிவாரணமாக வழங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(இ) நெல்லை மாவட்டம், பீடித் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை அவர்கள்.*

***டாக்டர் (திருமதி) பூங்கோதை:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் சுமார் ஐந்து இலட்சம் பீடித் தொழிலாளர்கள் உள்ளனர். அதில் 80 சதவிகிதம் பேர் நெல்லை மாவட்டத்தைச் சார்ந்தவர்கள். நான் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆலங்குளம் தொகுதியில் ஒரு இலட்சத்து 10,000 பீடித் தொழிலாளர்கள் உள்ளனர். முக்கியமாக அவர்கள் 1,000 பீடி சுற்றினால் 204 ரூபாய் கூலி கொடுக்கிறார்கள். வருங்கால வைப்பு நிதியாக ரூபாய் 20-ஐ பிடித்துவிட்டுத்தான் அந்தக் கூலியை அவர்களுக்குக் கொடுக்கிறார்கள். இதில் பெரிய பிரச்சினை என்னவென்றால், கடந்த நான்கு வருடங்களாக, 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை படிக்கும் ஆரம்ப நிலை குழந்தைகளுக்கு 750 ரூபாய், நடுநிலைப் பள்ளிகளில் படிப்பவர்களுக்கு 900 ரூபாய், உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு 1,750 ரூபாய், மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு 2,000 ரூபாய், கலைக் கல்லூரி மாணவர்களுக்கு 3,000 ரூபாய், தொழிற்சார் கல்லூரி* Professional Colleges-ல் *படிப்பவர்களுக்கு ரூ.8,000/- உதவித் தொகையை ஒரு வருடம் அல்ல, இரண்டு வருடங்கள் அல்ல, கடந்த*

2019 பிப்ரவரி 13] [டாக்டர் (திருமதி) பூங்கோதை]

நான்கு வருடங்களாக அங்கீகரிக்கப்பட்ட பெரிய பெரிய பீடி கம்பெனிகளான சையது பீடி, காஜா பீடி, கணேஷ் பீடி போன்ற கம்பெனிகள் கொடுக்கவில்லை. அவர்களின் வைப்பு நிதியிலிருந்து வரும் வட்டியிலிருந்து தரவேண்டிய அந்த உதவித் தொகையை நான்கு வருடங்களாக என்னுடைய தொகுதியில் யாரும் பெறவில்லை. நான் பேசி முடித்த பிறகு, உங்களுக்கு ஆதாரத்தை வழங்குகிறேன். தயவுசெய்து இந்தத் தனியார் கம்பெனியினரை அழைத்துப் பேசி, துரிதமாக இந்தக் கல்வி உதவித் தொகையை, விடுபட்ட அந்த நான்கு வருடங்களுக்கும் மொத்தமாகச் சேர்த்து வழங்க நடவடிக்கை எடுக்கும்படி தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின்கீழ் செயல்படும் திருநெல்வேலி பீடித் தொழிலாளர் நல ஆணையர்மூலம் தமிழ்நாட்டில் உள்ள பீடித் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை உட்பட பல்வேறு நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. 2015-2016 முதல் 2018-2019 ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்கு தமிழ்நாட்டில் 2,60,413 பீடித் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகையாக ரூ.39,54,53,630 (ரூபாய் முப்பத்தொன்பது கோடியே ஐம்பத்து நான்கு இலட்சத்து ஐம்பத்து மூன்றாயிரத்து அறுநூற்று முப்பது மட்டும்) மானியமாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், 2018-2019 ஆம் ஆண்டுக்கு 24,319 பீடித் தொழிலாளர்களுக்கு ரூ.4,00,49,820 (ரூபாய் நான்கு கோடியே நாற்பத்தொன்பதாயிரத்து எண்ணூற்று இருபது மட்டும்) கல்வி உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. 2019-2020 ஆம் ஆண்டிற்கு மத்திய அரசிடமிருந்து ஏப்ரல் மாதம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டவுடன் மே மாத இறுதிக்குள் இத்தொகை வழங்கப்படும். கல்வி உதவித் தொகை தொடர்பாக தகுதியுடைய பயனாளிகளுக்கு புகார் ஏதும் இருப்பின் திருநெல்வேலி, மத்திய தொழிலாளர் நல ஆணையர் (பீடி) அவர்களிடம் மனு அளித்து நிவாரணம் பெறலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*